**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 5/2018**
**U/s. 454,380 IPC**
**PROSECUTION WITNESS NO. 3 (LW. 11)**

| | |
|---|---|
| **Name** : திருமதி. சந்திரா **(IO)** | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**1** வது எதிரி ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**. 2** வது எதிரி **split up 187/2026** ல் பிடிக்கட்டளையில் உள்ளார்**.**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. பரத் , பெஞ்ச் கிளார்க் . செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No. 5/2018 25.05.2026 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.50 Pm**

**முதல் விசாரணை:**

**1,** நான் தற்போது தஞ்சாவூர் மாவட்ட குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஏற்கனவே 2017 ம் வருடம் தெற்கு காவல்நிலைய காவல் ஆய்வாளர் பொறுப்பிலிருந்தபோது 23.04.2017 ம் தேதி உதவி ஆய்வாளர் திரு. மதன் குமார் நிலைய பொறுப்பிலிருந்தபோது அருளானந்த நகர் 6 வது குறுக்கு தெருவைச்சேர்ந்த நியாஷ் அகமது என்பவர் நிலையம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று மாலை 17.00 மணிக்கு நிலைய குற்ற எண் 126/2017 சட்டபிரிவுகள் 454,380 இதசவின் **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். புகார் அசாஆ 2 , முதல்தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் மேற்படி வழக்கினை காவல் ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் அவர்கள் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றையதினமே மாலை 18.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் நல்லதம்பி மற்றும் துரைராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்துளளார். **பார்வை மகசர் அசாஆ 4 , மாதிரி வரைப்படம் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் நியாஷ் அகமது, பத்ருநிஷா, சரிப் ஜாபர், சிரிஸ் பாத்திமா, நல்லதம்பிமற்றும் துரைராஜ் தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி வழக்கினை பொறுப்பிலிருந்த நான் எனது விசாரணைக்க எடுத்து கொண்டு 16.05.2017 ம் தேதிபகல் 12.00 மணிக்கு போலீ"ஸ் பார்டி சகிதம் தஞ்சாவூர் டேனியல் தாமஸ் நகர், குட்சர் ரோட்டில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அவ்வழியே வந்த பதிவு எண் இல்லாத வெள்ளைநிற சிப்ட் டிசயர் காரை நிறுத்திசோதனை செய்தததில் முனனுக்கு பின் முரணாக பதிலளித்தால் மீண்டும் விசாரிக்க அவ்விருவரும், கட்டைபிரபு (எ) அருண்பிரபு என்றும், மற்றொருவர் சுரேஷ் என்றும் கூறினார்கள். மேற்கூறிய வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் என

விசாரணையில் தெரிய வந்ததால் மேற்படி இருவரையும் குற்றம் காரணம் கூறி நீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றியும் கைது செய்து, சாட்சிகள் துரைராஜ் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் கட்டைபிரபு (எ) அருண்பிரபு மற்றும் சுரேஷ் இருவரும் எவ்வித துன்புறுத்தலும், அச்சுறுதலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும், எதிரி எடுத்து ஆஜர் செய்து வழக்கின் தடயப்பொருளான 54 பவுன் எடையுள்ள தங்க நகைகளான 15 பவுன் எடையுள்ள நெக்லஸ்–1 , 18 பவுன் எடையுள்ள ஆரம் –1 , தோடு –1 ஜோடி, மோதிரம் –1, கைசெயின் –1, 8 பவுன் எடையுள்ள தங்க காப்பு, 2 பவுன் எடையுள்ள தங்க மோதிரம் –2 ,3 பவுன் எடையுள்ள தங்க ஜிமிக்கி 1 ஜோடி, 3 பவுன் எடையுள்ள கல் ஜிமிக்கி –1 ஜோடி, 5 பவுன் எடையுள்ள டாலருடன் கூடிய தங்க செயின் 14.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி, எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் திரேக பரிசோதனை தக்க வழிகாட்டுதலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். வழக்கின் தடயப்பொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 6 , அசாஆ 7 கைப்பற்றுதல் மகசர் அசாஆ 8 , படிவம் 91 அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிபி எண் 69/2017 ஆகும்.**

4. பின்னர் வழக்கின் சாட்சிகள் துரைராஜ் மற்றும் கிருஷ்ணமூர்த்தி, வழக்கின் புகார்தாரர் நியாஷ் அகமது, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திரு. மதன்குமார் ஆகியோர் தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காவல் ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகசரை சம்பவயிடத்தினோடு ஒத்து போனதால் நான் தனியாக வரைப்படம் தயார் செய்யவில்லை. காவல் ஆய்வாளரிடம் சாட்சிகள் நியாஷ் அகமது, பத்ருநிஷா, சரிப் ஜாபர், சிரிஸ் பாத்திமா, நல்லதம்பி கூறிய சங்கதிகளையே என்னிடம் கூறியதால் அவர்களை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

5. பின்னர் எனது புலன் விசாரணை முடித்து கொண்டு மேற்படி சட்டபிரிவின் கீழ் எதிரிகள் மீது கடந்த 23.06.2017 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

**1.** புகார்தாரர் நியாஷ் அகமது தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் பத்ருநிஷா, சரிப் ஜாபர், சிரிஸ் பாத்திமா ஆகியோர் அசா1ற்கு உறவினர்கள் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில எதிரிகள் சம்மந்தப்பட்ட இவ்வழக்கில் உள்ள தடயபொருளை மட்டும் சொன்னார்களா

அல்லது வேறு வழக்கில் ஈடுப்பட்ட குற்ற சம்பவம் குறித்து கூறினார்களா என்றால் கூறினார்கள்.

2. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், சம்பவயிடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளிவிவர கணக்கிற்காக வீட்டிலிருந்த எதிரியை விசாரணைக்காக அழைத்து வந்து பொய்யாக வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யபடவில்லை என்றாலும், வழக்கின் சொத்து கைப்பற்றடவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.